

தந்தை பெரியாரின் 148 பிறந்த நாளை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஐ.பெரியசாமி தலைமையில் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், முன்னிலையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பின்னர் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றனர்.

# த.வெ.க. பிரமுகர் சமூக வலைதளத்தில் பாலியல் அவதூறு!

## கடலூர் எஸ்.பி.யிடம் பெண் தொழில்முனைவோர் பரபரப்பு புகார்!

கடலூர், செப். 19-

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தைச் சேர்ந்த பெண் தொழில்முனைவோர் ஒருவரின் புகைப்படங்களைப் பயன்படுத்தி, சமூக வலைதளங்களில் பாலியல் ரீதியாகவும் அவதூறாகவும் கருத்துக்களைப் பரப்பியதாகக் கூறப்படும் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாகக் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட பெண் நேரில் அளித்த பரபரப்பான புகார் ஆன்லைன் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**பெண் தொழில்முனைவோர் மீது வன்மத் தாக்குதல்**

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தைச் சேர்ந்த ஆர்த்தி செல்வகுமார் கடந்த ஆறு ஆண்டுகளாக ஆன்லைன் மூலம் உணவுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனைத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். இதன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கி, சுயசார்புடன் வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக சமூக வலைதளப் பக்கங்களில் த.வெ.க. (தமிழக வெற்றிக் கழகம்) பெயர் மற்றும் சின்னத்தை தனது பயோவில் (Bio) குறிப்பிட்டு இயங்கி வரும் ஒரு நபர், ஆர்த்தி செல்வகுமாரின் தனிப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தி வந்துள்ளார். மேலும், அவர் பெண்களை வைத்து தவறான தொழில் செய்து வருவதாகக் குறிப்பிட்டு ஆபாசமான, இழிவான மற்றும் பாலியல் ரீதியான தகாத கருத்துக்களைத் தொடர்ந்து பரப்பி வந்துள்ளார்.

**எஸ்.பி.யிடம் நேரில் அளித்த புகாரும், டிஜிட்டல் ஆதாரங்களும்**

தொடர் அவதூறுகளால் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளான ஆர்த்தி செல்வகுமார், தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, நேற்று கடலூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரை நேரில் சந்தித்துப் புகார் மனு அளித்தார்.

புகாரின்போது அவர் ஊடகங்களிடம் கூறியதாவது:

- "Mr. Manikandan Sankaranainar என்பவரது இன்ஸ்டாகிராம் ஐ.டி. மூலம் (Mani_history_mad), எனது புகைப்படம் மற்றும் வீடியோக்களைப் பயன்படுத்தி அவதூறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன."
- "பொதுமக்கள் பார்க்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்தப் பதிவுகள் எனது நற்பெயர், குடும்பக் கண்ணியம் மற்றும் சமூக மரியாதைக்குப் பெரிய அளவில் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன."
- "சம்பந்தப்பட்ட இன்ஸ்டாகிராம் ஐ.டி.யின் சுயவிவரம் (Profile), பதிவுகள் (Posts), கமெண்டுகள் (Comments), ஸ்கிரீன் ஷாட்டுகள் மற்றும் வீடியோ பதிவுகள் போன்ற அனைத்து டிஜிட்டல் ஆதாரங்களும் என்னிடம் பத்திரமாக உள்ளன. விசாரணைக்கு அவற்றைச் சமர்ப்பிக்கத் தயாராக உள்ளேன்" எனக் கூறினார்.

**சைபர் கிரைம் போலீசாரின் முதற்கட்ட விசாரணை!**

பாதிக்கப்பட்ட பெண்ணின் புகாரைப் பெற்றுக் கொண்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு சைபர் கிரைம் (Cyber Crime) பிரிவு காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சைபர் பிரிவு போலீசார் தீவிர விசாரணையைத் தொடங்கியுள்ளனர். முதற்கட்ட விசாரணையில், ஆர்த்தி மீது அவதூறு கருத்துக்களைப் பரப்பிய நபர் தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. பெண்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது. தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் அனுமதியின்றி

# வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள் - மாபெரும் வசூல் வேட்டை!

## ஊழல் தடுப்புப் பிரிவு விசாரணை!

தேனி, செப். 19 -

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் முறையான கட்டிட அனுமதி வாங்காமல் பல வணிக வளாக கட்டிடங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் பல ஆண்டுகளாக இயங்கி வருவதாக பரபரப்பு புகார் எழுந்துள்ளது. இதன் பின்னணியில் சம்பந்தப்பட்ட நபர்களிடம் மாபெரும் வசூல் வேட்டை நடைபெற்று வருவதாகவும், இது தொடர்பாக மாவட்ட ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



**அனுமதியின்றி கட்டிடங்கள்:**

ஆண்டிபட்டி பேரூராட்சி பகுதிகளான பஸ் ஸ்டாண்ட் சாலை, தேனி சாலை, வைகை அணை சாலை, மதுரை சாலை உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் ஏராளமான வணிக வளாகங்கள், இரண்டு மற்றும் மூன்று மாடி கட்டிடங்கள், திருமண மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன.

இந்த கட்டிடங்களுக்கு பேரூராட்சியிடம் இருந்து முறையான கட்டிட அனுமதி பில்டிங் பிளான் அப்ரூவல், வரைபட அனுமதி பெறப்படவில்லை என்றும், பல கட்டிடங்கள் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தை விட கூடுதல் தளங்கள் கட்டி விதிமீறல் செய்துள்ளதாகவும் புகார் கூறப்படுகிறது.

விதிப்படி ஒவ்வொரு கட்டிடத்திற்கும் சதுர அடிக்கு கட்டணம், வரைபட கட்டணம், தொழில் வரி என பேரூராட்சிக்கு பல லட்சம் ரூபாய் வருவாய் வர வேண்டும். ஆனால் அனுமதி வாங்காமல் கட்டப்படுவதால் பேரூராட்சிக்கு பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**மாபெரும் வசூல் வேட்டை:**

இந்த விதிமீறல் கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய பேரூராட்சி அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் சிலர், கட்டிட உரிமையாளர்களிடம் மாதந்தோறும், வருடந்தோறும் பெரும் தொகையை வசூல் செய்து கொண்டு கண்டுகொள்ளாமல் இருந்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஒரு திருமண மண்டபத்திற்கு ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரையும், வணிக வளாகங்களுக்கு கடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வசூல் நடைபெறுவதாகவும் சமூக ஆர்வலர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

**ஊழல் தடுப்பு பிரிவு விசாரணை**

இது சம்பந்தமாக தேனி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு விஜிலென்ஸ் ஆன்ட்டி கரெக்ஷன் ஆதாரங்களுடன் புகார் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அதன் அடிப்படையில் அதிகாரிகள் ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள கட்டிட அனுமதி கோப்புகளை கைப்பற்றி விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆண்டிபட்டி பேரூராட்சியில் உள்ள அனைத்து வணிக வளாகங்கள், திருமண மண்டபங்களின் கட்டிட அனுமதியை மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்ய வேண்டும்.

அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது சீல் வைத்து, அபராதம் விதிக்க வேண்டும்.

வசூல் வேட்டையில் ஈடுபட்ட அதிகாரிகள், பணியாளர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பேரூராட்சிக்கு வர வேண்டிய வருவாயை மீட்டு, அரசு கஜானாவில் சேர்க்க வேண்டும்.

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் நேர்மையான ஆட்சி செய்கிறோம் என்று பொய் பிரச்சாரம் நேர்மையான அதிகாரிகள் இருக்கும்போது இப்படி ஒரு மோசடி நடப்பது அதிர்ச்சியளிப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு, அன்னாரின் உருவப்படத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்கண்டேயன் மலர் தூவி மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், செல்வராஜ், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


திராவிட மாதத்தில் செப்டம்பர் 20 முதல்

புதிய தொடர்கள் புத்தம்புது வடிவமைப்பில்





முரசொலி

பாசறை



சமகால அரசியல்-வரலாற்றை அலசும்

காலத்தின் குரல்

திராவிடன் பதில்கள்

இளம் தலைமுறை எழுப்பும் கேள்விகளுக்கு

புதையல்

அதிர்வுகளை ஏற்படுத்திய அந்தக் கால எழுத்துகள்

பேரறிஞர் பேனா

எக்காலத்துக்கும் பொருந்தும் முத்தான படைப்புகள்

கலகக்காரர் கலைஞர்

AI ஓவியத்தில் கலைஞரின் புரட்சி